# MUT

SEID MUTIG
MACHT MIT

## எனது, உனது, எங்களது உரிமைகள்.

புலம்பெயர் அனுபவங்கள் குறித்து பெண்களுக்கான* ஒரு சிறிய வழிகாட்டி

DaMigra
Dachverband der Migrantinnenorganisationen




ஊக்குவிப்பு இன்றே

## துணிவு - திட்டம்.

குடிவரவாளர்*கள் மற்றும் புலம்பெயர்ந்த பெண்கள் ஒன்றுசேர்ந்து தமது அனுபவங்களைப் பகிர்தல். இவர்கள் அதிக வேளைகளில் சமூகத்தில் சம உரிமையுள்ள ஒரு பகுதியினராக உணரப்படாத ஒரு நாட்டில் வசிக்கின்றனர். DaMigra e.V அமைப்பு துணிவுத் - திட்டத்தின் ஊடாக யேர்மனியில் அதிக காலம் வாழும் பெண்களின்* குடிபெயர்ந்த வரலாற்று அனுபவங்களை மீளக் கையில் எடுக்கின்றது. புலம்பெயர்ந்த பெண்களுக்கு அவர்கள் துணிவை வழங்குபவர்களாக மற்றும் பாலம் அமைப்பவர்களாக தகவல்கள், ஆலோசனைகள் வழங்குபவர்களாக மற்றும் வழிகாட்டிகளாக இருந்து சமூக வாழ்வில் பங்கேற்க உதவுகின்றனர்.

துணிவுத் - திட்டம் யேர்மன் பூராகவும் நிகழ்ச்சிகள், ஆலோசனைகள்- மற்றும் ஊக்கம் வழங்கும் திட்டங்களை ஒழுங்குபடுத்தி, குடிவரவு வரலாற்றையுடைய பெண்களை, புலம்பெயர்ந்த பெண்களுக்கு ஆலோசனைகள் வழங்குபவர்களாக மற்றும் வழிகாட்டிகளாக ஆயத்தப்படுத்துகின்றது.

புலம்பெயர்ந்த பெண்களுக்கு, தமது சொந்த உரிமைகள் குறித்து அறிந்து கொள்வதற்கு உரிமையுள்ளது. ஊக்கமளிப்பது மற்றும் மனித உரிமைகளைக் கட்டமைப்பது என்பன துணிவுத் - திட்டத்தின் முக்கிய பணியாகும்.

துணிவுத்-திட்டத்தின் செயற்பாடுகளாக:

- மனித- மற்றும் பெண்களின் உரிமை குறித்த கருத்தரங்குகள்
- வளர்ப்பு-, கல்வி- மற்றும் உடல்நலம் குறித்த கேள்விகளுக்கான தகவல் வட்டம்.
- பொதுப்பணி நிலையங்களைத் தரிசித்தல்

# உங்கள் உரிமைகளை அறிந்திருப்பதற்கான, உங்கள் உரிமை.

சட்டத்திற்கு மதிப்பளிக்கும் நாடுகளில் மனித மாண்புக்கு எவ்வித தீங்கும் ஏற்படுத்தாது, அனைவருக்கும் சமமான -மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் இருப்பினும், குறிப்பிட்ட குழுக்கள் அன்று போல் இன்றும் அடிக்கடி -மனித உரிமைப் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றன. இச் சூழமைவில் அனைத்துலக மனித உரிமைப் பாதுகாப்பு மையம், விசேடமாகப் பாதிக்கப்படும் குழுக்களுக்கு ஒரு விதமான மேலதிக பாதுகாபபுக்கான கற்றைநெறிகளை வழங்குகின்றது. பிள்ளைகளுடன் சேர்ந்து பெண்கள், குடிபெயர்ந்தவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் இவ்வாறான விசேட பாதிப்புக்குள்ளாகும் குழுக்களாகக் கணிக்கப்படுகின்றனர். அதாவது, ஏனையவர்களுடன் தனியாகப் பெண்கள் அவர்களது பாலினம் காரணமாக விசேட மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகின்றனர். புலம்பெயர்ந்த பெண்கள் இதைவிடவும் மேலாக ஒரு விதத்தில் பெண்களாகவும் மற்றும் புலம்பெயர்ந்தவர்களாகவும் இருமடங்கு பாதிக்கப்படுகின்றனர்.

இருப்பினும் எந்த அளவிற்கு பொதுவான மனித உரிமைகள் மற்றும் இந்த வழமைக்கு மாறான பாதுகாப்புக் கட்டமைப்புகள் புலம்பெயர்ந்த பெண்களாகிய உங்களுக்கு, அனுபவித்த மற்றும் அறியப்பட்ட பெண் உரிமை மீறல்கள் குறித்து ஏதாவது விளக்கத்தை அறியவைத்துள்ளன? இவை குறித்து நீஙகள் அறிந்திராவிட்டால், உங்களுக்காக மனித உரிமைகள் இருந்தும் என்ன பயன்? உங்களுக்கு இவை குறித்து விளங்காதிருந்தால், பெண்கள் உரிமை குறித்து அறிந்திருந்தும் என்ன பயன்? பெண்- மற்றும் மனித உரிமை குறித்து விளங்கியிருந்தும், அவற்றுக்கு மதிப்பளிக்காது மற்றும் அவற்றுக்காக குரல் கொடுக்காதிருந்தால் யாருக்கு அது உதவும்?

பின்வரும் தகவல்கள், யேர்மனியில் புலம்பெயர்ந்துள்ள பெண்களாகிய உங்களுக்கு, உங்களது உரிமைகளை அறியவும் அதற்கான வழிவகைகளைக் காட்டுவதோடு, நீங்கள் எவ்வாறு உங்களது உரிமைகளைப் பெறலாம் என்பது குறித்தும் விளக்கமளிக்கும்.

இந்த வழிகாட்டி உங்களுக்கு உங்களது தொழில், கல்வி, தஞ்சம், உடல்நலம், தாம்பத்தியம் மற்றும் குடும்பம் அத்தோடு அரசியல் மற்றும் சமூக வாழ்வில் இணைவதற்கு துணிவை ஏற்படுத்தும். உங்களது பிரச்சினைகளுக்காக எந்த வேளையிலும் தொடர்பு கொள்வதற்கான உறுதியான நபர்களை நீங்கள் கண்டுகொள்ளலாம்.

இந்த வழிகாட்டி அனைத்தையும் முழுமையாக விளக்குவதாக எண்ணவில்லை. அதற்கு மாறாக யேர்மனியில் புலம்பெயர்ந்த பெண்களிற்கு அவர்களது உரிமை குறித்து விழிப்படையச் செய்வதே இதன் நோக்கமாகும்.



# தஞ்சம் கோருதல்

## வந்தடைவதற்கு முன்பிருந்து முடிவெடுக்கும் வரை

யேர்மனியில் அகதியகத் தஞ்சம் கோருவதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. இதற்காக நீங்கள் தஞ்சம் தேடுபவராக விண்ணப்பம் செய்ய வேண்டும். அதன்பின் உங்களுக்கு விண்ணப்பம் செய்வதற்கான ஒரு அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும் (BÜMA). BÜMA என்பது ஒரு வதிவிட அனுமதிப்பத்திரமல்ல, மாறாக தனியாக ஒரு தற்காலிக அனுமதியாகும்.

இதன்பின் உங்களுக்கு குடிவரவு மற்றும் அகதிகளுக்கான மத்திய திணைக்களத்தில் (BAMF) ஒரு தஞ்ச விண்ணப்பத்தை செய்வதற்கு உரிமையுள்ளது. தஞ்ச விண்ணப்பம் செய்த பின்பு தனிப்பட்ட முறையில் உங்களிடம் நேரடியாக விளக்கம் பெறுவதற்காக ஒரு தவணையை எழுத்து மூலமாக நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். இந்த நேரடியாக விளக்கமளித்தலில் நீங்கள் பங்குபெற வேண்டியது கட்டாயமானதாகும். அங்கு செல்ல முடியாமைக்கு ஒரு நம்பக்கூடிய மன்னிப்பைக் கோராவிட்டால் (உதாரணம் நோய் ஏற்பட்டிருந்தால் வைத்தியரின் அத்தாட்சியை BAMF க்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்) BAMF தஞ்ச விண்ணப்பத்திற்கு, உங்கள் கோவையில் இருக்கும் சம்பவங்களை வைத்து முடிவெடுக்கும்.

உங்கள் தாய்மொழியில் உங்கள் விளக்கத்தை வழங்குவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.

பாலின ரீதியான துன்புறுத்தல்கள்/பாலியல் வன்முறைகள் இடம்பெற்றிருந்தால் - உ-ம் உங்கள் நாட்டில் நீங்கள் மரியாதையின் நிமித்தமான கொலை, பெண் விருத்தசேதனம் அல்லது வற்புறுத்தல் திருமணத்திற்கு நிர்ப்பந்திக்கப்படுவீர்களானால், ஒரு பெண்ணால்* விசாரிக்கப்படுவதற்கும், ஒரு பெண் மொழிபெயர்ப்பாளரைப்* பெறுவதற்கும் உங்களுக்கு உரிமை உள்ளது. தற்சமயம் விளக்கத்திற்கு முன்பாக இவ்வாறு தெரிந்திருக்காது இருந்தால், ஒரு ஆணுக்கு முன்பாக நீங்கள் எந்த விபரங்களையும் கூற விரும்பாவிட்டால், விளக்கமளிக்கும் வேளையில் இது குறித்துத் தெரிவிப்பதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது.

## முடிவுசெய்யும் விதங்கள்

**சாதகமாக**

சாதகமாக முடிவு எடுக்கப்பட்டால் நீங்கள் தஞ்ச உரிமை பெற்றவராக பயணம் செய்வதற்கான ஒரு அடையாள அட்டையையும் அத்துடன் மூன்று வருடத்துக்கான ஒரு வதிவிட அனுமதியையும் பெற்றுக்கொள்ளும் உரிமை பெறுவீர்கள்.

தஞ்ச விண்ணப்பத்திற்காக ஒரு சாதகமான முடிவு எடுக்கப்பட்டு அது அமுலுக்கு வந்த முதல் மூன்று மாதத்திற்குள் உங்கள் குடும்பத்தை அழைத்துக் கொள்வதற்கு உரிமையுள்ளது. இதன் அர்த்தம் என்னவென்றால், உங்களது கணவர்* அல்லது/

**தொடர்புகொள்ளவேண்டிய நிலையம்**

Anwältinnen ohne Grenzen e.V.
Anselm-Feuerbach-Platz 2
79100 Freiburg
info@aogde.com
0761 80520
anwaeltinnen-ohne-grenzen.de

தஞ்சம்

மற்றும் உங்களது வயது குறைந்த பிள்ளைகளை உங்களோடு அழைத்துக் கொள்ளலாம் என்பதாகும்.

தொழில் பெற்றுக்கொளவதற்கு அத்துடன் ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில் சேருவதற்கு, நிதிஉதவிகளைப் பெறுவதற்கு, பிள்ளைகளுக்கான*/பெற்றோருக்கான* பணத்தை மற்றும் வீட்டு வாடகை உதவிப் பணம் மற்றும் பல்கலைக்கழக உதவிப் பணமான BAFöG பெறுவதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது.

**தஞ்ச விண்ணப்பம் ("சாதாரணமாக") நிராகரிக்கப்பட்டு, ஆனால் திருப்பி அனுப்புவதற்கு முன்பாக பாதுகாப்பு வழங்கப்பட்டால் (தற்காலிக பாதுகாப்பு என அழைக்கப்படுவது)**

உங்கள் தாயகத்தில் உயிருக்கும் உடலுக்கும் ஆபத்து ஏற்படலாம் என்ற பயம் இருந்தால் நீங்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டீர்கள் என்பதற்கு உரிமையுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் வதிவிட அனுமதி ஒரு வருடமாக அமைந்திருக்கும். குடும்பம் ஒன்றிணைதல் ஒருசில கட்டுப்பாடுகளுடன் இயலுமானதாக இருக்கும்.

உங்களது விண்ணப்பம் பாதகமாக முடிவுசெய்யப்பட்டிருந்தால், (ஆனால் திருப்பி அனுப்பப்படுவது BAMF ஆல் தடை செய்யப்பட்டிருந்தால்) இரு கிழமைகளுக்குள் அதற்கு எதிராக நீதிமன்றில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது: இதற்காக ஒரு வழக்கறிஞர் கட்டாயம் தேவைப்படும். வெளிப்படையாக காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் (திருப்பி அனுப்பப்படுவதற்கு எவ்வித பாதுகாப்புமில்லை)

இதன்போது தஞ்ச விண்ணப்பத்திற்கு வேறொரு வகையான பாதகமான முடிவு ஒன்றும் உள்ளது - "வெளிப்படையாக காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல்" நிராகரிக்கப்படுவது. இதன்போது ஒரு கிழமைக்குள் ஆட்சேபனையை சமர்ப்பிக்க மற்றும் ஒரு மிக அவசரமான விண்ணப்பத்தைச் செய்வதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. இந்த வழக்கின் ஊடாக காலத்தை தள்ளிப்போடும் விளைவு இருக்காது, அதாவது நீங்கள் இப்படி செய்திருந்தாலும் திருப்பி அனுப்பப்படலாம்.

உங்கள் தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டாலும், வழக்கறிஞருக்கான- மற்றும் வேறு நீதிமன்ற செலவுகளை செலுத்துவதற்காக விண்ணப்பிக்க உங்களுக்கு உரிமை உள்ளது. வெற்றிபெற வாய்ப்புண்டு எனத் தெரிந்தாலும் உங்களிடம் குறைந்தளவு பணம் இருந்தால், இப்படியான வழக்குச் செலவு உதவியை அனுமதிப்பது தேவைப்படும். இதன்போது தஞ்ச உதவிப் பணத்தை நீங்கள் பெறுகின்றீர்கள் என்ற ஒரு பத்திரத்தை அத்தாட்சியாக வழங்கினால் போதுமானது.



எனது, உனது, எங்களது உரிமைகள்.

## கற்றுக் கொள்வது / ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில் பங்கேற்பது

கற்கைநெறிகளுக்குள் நுழைவதைப் பொறுத்தவரை அது உங்கள் வதிவிட அனுமதியின் தரத்தில் தங்கியிருக்கும், அதாவது உங்கள் தஞ்ச வழக்கு இன்னும் நடக்கின்றதா அல்லது ஏற்கனவே முடிவடைந்து விட்டதா என்பதில், மற்றும் உங்களுக்கு தஞ்சம் வழங்கப்பட்டதா அல்லது நீங்கள் தற்காலிக பொறுத்துக் கொள்ளலாக ஏற்கப்பட்டுள்ளீர்களா என்பதாகும். பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு, அவர்கள் எவ்விதமான வதிவிட அனுமதியை வைத்திருந்தாலும், பாடசாலை செல்வதற்கான உரிமை உள்ளது. முதல் படியாக, ஒத்துழைத்து முன்னேறும் ஒரு பாடத்திட்டத்தில் பங்கேற்பது அவசியமாகும். ஒரு ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில், இங்கு தங்கும் வாய்ப்பு அதிகம் உள்ள தஞ்சம் கோருவோர், ஒரு வதிவிட அனுமதி வைத்துள்ள தற்காலிக பொறுத்துக்கொள்ளலாக இருப்பவர்கள், மற்றும் வதிவிட அனுமதி உள்ளவர்கள் பங்கேற்கலாம். இவ்வாறான ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டத்தில் நீங்கள் பங்கேற்காது விட்டால், வேறு விடயங்களுடன் உங்களுக்கான உதவிகள் குறைக்கப்படலாம். இதனால் பல்கலைக்கழகம், உயர் கல்லூரி அத்துடன் தொழில்- மற்றும் தொழில் கற்பது மற்றும் தொழில் பயிற்சிக்கு விண்ணப்பிப்பதில் பாதகமான விளைவுகள் ஏற்படலாம்.

**பின்வரும் தொடர்பாளர்கள் நீங்கள் வசிக்கும் நகரங்களில் உள்ள ஒத்துழைத்து முன்னேறும் பாடத்திட்டம் குறித்து மேலதிக விபரங்களைத் தந்து உதவுவார்கள்**

- இளையோருக்கான குடிவரவு சேவை மற்றும் குடிவரவு ஆலோசனை
- ஒத்துழைத்து முன்னேற்றும் திணைக்களம் அல்லது நகரத்தின் பல் கலாச்சார அலுவலகம்
- கலாச்சார நடுநிலையம்
- மொழி கற்பிக்கும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள்
- தொழில் முகவர்கள் மற்றும் தொழில்-நடுநிலையம்
- மக்கள் பாடசாலைகள்

# தொழில் செய்வது

தொழில் பெறுவதற்கான சந்தைக்குள் நுழைவதென்பது உங்களது வதிவிட அனுமதியின் தரத்தில் தங்கியுள்ளது. தொழில் பெறும் சந்தைக்குள் நுழைவது உங்களுக்கு தங்கியிருக்கும் முதல் மூன்று மாதங்களுக்கு மற்றும் முதல் முறையாக உங்களைப் பொறுப்பேற்கும் நிலையத்தில் தங்கியிருக்கும் காலத்தில், அதாவது ஒரு முகாமில், தடைசெய்யப்பட்டிருக்கும். உங்களுக்கு நீங்கள் தங்கியுள்ள நகரத்தின் வெளிநாட்டவர் அலுவலகம் வழங்கும் தொழில் அனுமதி ஒன்று தேவைப்படும். 4. வது மாதம் தொடக்கம் நீங்கள் யேர்மனியின் பல பாகங்களிலும் தொழிலைப் பெற்றுக்கொள்ளலாம். தொழில் பெறுவதற்கான சந்தைக்குள் நுழைவதற்கான விதிகள் அடிக்கடி மாற்றமடைவதால், எப்பொழுதும் நீங்கள் தொழில் முகவரின் தொடர்பாளர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் அனுமதி இல்லாது ஒரு வேலைக்கு நீங்கள் செல்வீர்களானால், நீங்கள் உங்கள் வதிவிட அனுமதியை பாதிப்படையச் செய்வீர்கள்.

யேர்மன் முழுவதுக்குமான தொடர்பு நிலையம்
www.arbeitsagentur.de

எனது, உனது, எங்களது உரிமைகள்.

# தொழிற்கல்வி மற்றும் உயர்கல்வி

நீங்கள ஒரு தொழிற்கல்வியை ஆரம்பிப்பதற்காக, கட்டாயமாக ஒரு தொழில் அனுமதியை சமர்ப்பிக்க வேண்டும். இதிலுள்ள விதிவிலக்குகள் குறித்த தகவல்களை, தொழில் முகவர் அல்லது தொழிற்சாலை- மற்றும் கைவேலைகளுக்கான அமைப்பிடம் பெற்றுக்கொள்ளலாம். உயர்கல்விக்குச் செல்வதற்கான தகுதிகளை பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்லூரிகள் பரிசீலிக்கும். அநேகமான உயர்கல்விப் படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கு போதுமான அளவில் யேர்மன் மொழி தெரிந்திருப்புது முக்கிய நிபந்தனையாக இருக்கும். BAFöG அல்லது தொழிற்கல்வி மற்றும் உயர்கல்விக்கான அரச உதவி வழங்குவது- வதிவட அனுமதியின் தரத்தில் தங்கியிருக்கும். தஞ்சம் கேட்டபவர்களுக்கான உதவி மானியம் வழங்கும் திட்ட வசதியுள்ளது. இது குறித்து பல்கலைக்கழக ஆலோசனை நிலையங்கள் மற்றும் அண்மையிலுள்ள உயர்கல்லூரிகளில் கேட்டு அறிந்து கொள்ளலாம்.



# தாம்பத்தியம், சேர்ந்துவாழ்வது* மற்றும் தாயாக*

### துணையாளரை* சொந்தமாகத் தெரிவுசெய்தல்

நீங்கள் எப்போது மற்றும் எவரைத் திருமணம் செய்ய விரும்புகின்றீர்களோ அதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. யேர்மனியில் உங்கள் ஆண் துணை அல்லது பெண் துணையுடன் திருமணம் செய்யாமலும் சேர்ந்து வாழ முடியும்.

### சட்டப்படியான சிவில் தாம்பத்தியத்தில்

யேர்மனியில் தற்போது கட்டாய சிவில் திருமணம் என அழைக்கப்படுவது அமுலில் உள்ளது, அதாவது ஒரு திருமணம் விவாகப் பதிவுத் திணைக்களத்தால் பதிவு செய்யப்பட்டால் மாத்திரமே அது சட்டரீதியாக செல்லுபடியாகும். வெளிநாட்டில் மேற்கொள்ளப்பட்ட திருமணங்கள் யேர்மனியில், சட்டரீதியாக திருமணத்திற்குத் தேவையான நிபந்தனைகளை (உதாரணமாக திருமணமாகாதிருத்தல், வயது எல்லை) இருவரும் நிறைவேற்றியிருந்தால் மட்டுமே அது அடிப்படை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

பெண்கள்* மற்றும் ஆண்கள்* தாம்பத்தியத்தில் மற்றும் உறவுகளில் சம உரிமை.

தாம்பத்தியத்தில் அல்லது அதிலிருந்து விலகுவதில் பெண்கள்* மற்றும் ஆண்களுக்கு* சமமான உரிமைகளும் கடமைகளும் உள்ளன. எத்தனை





பிள்ளைகள்* மற்றும் எந்த இடைவெளியில் நீங்கள் அவர்களைப் பெற விரும்புகிறீர்கள் என்பதை நீங்கள் சுயவிருப்பில் முடிவு செய்யலாம். இதைவிடவும் உங்கள் கணவர் விரும்பாவிட்டாலும் அவரை விவாகரத்து செய்வதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது.

## விவாகரத்து

நீங்கள் விவாகரத்துப் பெற விரும்பினால், அதற்கான ஆலோசனை நிலையத்தில் அல்லது ஆண் அல்லது பெண் சட்டத்தரணியை* தொடர்பு கொள்ளுங்கள். தஞ்ச வழக்கு நடைபெறும் வேளையிலும் விவாகரத்துப் பெறுவதற்கு இயலும். உங்கள் தஞ்ச விண்ணப்பம் உங்கள் கணவரின்* தஞ்ச விண்ணப்பத்தில் தங்கியிருக்காது முடிவு செய்யப்படும்.

## பராமரிக்கும் உரிமை

நீங்கள் பிரிந்து செல்ல முடிவுசெய்தால், நீங்கள் தொடர்ந்தும் ஒன்று சேர்ந்து உங்கள் பிள்ளைகளைப் பராமரிக்க முடியும். ஆனால் பிள்ளை எங்கு வாழ்வது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். தந்தையிடம் மட்டுமா அல்லது தாயிடமா அல்லது மாறி மாறி இருவருடனுமா என்பதாகும்.

உங்கள் பிள்ளை ஒரு வன்முறையற்ற வாழ்க்கையை வாழ்வதற்கு உரிமையுள்ளது

இறுதியான வகைக்கு, தனது விருப்பத்தின்படி எங்கு தான் வாழ்வது சிறந்தது எனக் கூறுவதற்கு பிள்ளைக்கு உரிமையுள்ளது. பிள்ளைகளின் உரிமை என்பது மனித உரிமையாகும். தமது பிள்ளைகளைத் தகுந்த அளவில் பராமரிப்பது பெற்றோர்களது உரிமையும் கடமையுமாகும். இதன் அர்த்தமென்னவென்றால், ஒரு தாயாக உங்களுக்கு உரிமை மற்றும் கடமை உள்ளதென்பதாகும். பிள்ளையின் தந்தையை நீங்கள் திருமணம் செய்துள்ளீர்களோ அல்லது இல்லையோ, உங்களுக்குப் பிள்ளைக்கான உரிமை உள்ளது.

ஒரு வன்முறையற்ற வாழ்க்கையை வாழ்வதற்கு உங்கள் பிள்ளைக்கு உரிமையுள்ளது. உங்கள் பிள்ளையை அடிப்பதிலிருந்து மற்றும் துஸ்பிரயோகம் செய்வதிலிருந்து நீங்கள் பாதுகாக்க முடியும், இது உறவினரால் நடத்தப்பட்டாலும் கூட.

உங்கள் பிள்ளைக்கு கல்வி கற்பதற்கு உரிமையுள்ளது. யேர்மனியில் ஒவ்வொரு பிள்ளையும் ஆகக் குறைந்தது ஒன்பது வருடங்கள் பாடசாலை செல்லலாம்.

உங்கள் பிள்ளை பாலர் பாடசாலைக்கு செல்வதா அல்லது பாடசாலையில் சமய வகுப்பில் பங்கேற்பதா அல்லது இல்லையா என்பதை நீங்களே தீர்மானிக்கலாம்.



இந்த விடயங்களுக்கான முக்கிய தொடர்பாளர்களாக நகரத்திலுள்ள இளையோருக்கான திணைக்களங்கள், குடும்ப ஆலோசனை நிலையங்களாகும்.

ProFamilia பாலியல், சேர்ந்து வாழுதல் மற்றும் குடும்பக்கட்டுப்பாடு போன்ற விடயங்களுக்கான யேர்மன் அமைப்பு
www.profamilia.de

இரு வெவ்வேறு நாட்டுத் தம்பதிகள் மற்றும் சேர்ந்து வாழ்பவர்களுக்கான அமைப்பு
www.verband-binationaler.de

யேர்மன் முழுவதும் வன்முறையால் பாதிப்படைபவர்களுக்கான தொலைபேசி
116 006

துயரத்தை ஆற்றுப்படுத்துவதற்கான இலக்கம்
www.nummergegenkummer.de

எனது, உனது, எங்களது உரிமைகள்.

## உடலைப் பாதுகாப்பது மற்றும் உடல் நலம்

உடலைப் பாதுகாப்பதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. இதன் அர்த்தம் என்னவென்றால், அடிப்படை ரீதியாக எவரும் உங்கள் உடலுக்குத் தீங்கிழைக்க முடியாது.
சட்டம் உங்களை முன்னின்று பாதுகாப்பது
- உடல் வன்முறை
- அடித்தல், பாலியல் வன்முறை, உங்கள் உடம்பில் காயம் ஏற்படுத்தல்
- உளரீதியான வன்முறை
- பின்தொடர்தல், பயமுறுத்தல்கள், அனைத்து வகையான அச்சுறுத்தல்கள்
- நிறுவன ரீதியான வன்முறை
- சட்டம், உள்கட்டமைப்பு, மொழி ரீதியாக ஒதுக்கப்படுதல்





# இனப்பெருக்கம் மற்றும் பாலியல் ரீதியான உடல்நலம்

நீங்கள் கர்ப்பம் தரிப்பதற்கான தகமை மற்றும் உங்களது பாலியல் தன்மை விசேட பாதுகாப்புக்கு உட்பட்டதாகும். கீழே உள்ள கேள்விகளுக்கு ஏதாவது ஆலோசனை தேவைப்பட்டால், கீழ் உள்ள ஆலோசனை நிலையங்கள் உங்களுக்கு உதவி வழங்கும்.

- யேர்மனியில் இரண்டு பிள்ளைக்கு மேல் பெறுவது தவறானது என எனக்குக் கூறப்பட்டது. இது சரியா?
- நான் கர்ப்பமாக உள்ளேன், ஆனால் என்னால் பிள்ளையைப் பெற்றுறெடுக்க முடியாதுள்ளது. நான் கர்ப்பத்தைக் கலைக்க விரும்புகின்றேன். யார் எனக்கு மேலதிக உதவிகளை வழங்குவார்கள்?

பெண் உரிமை என்பது மனித உரிமையாகும்
069 970 979 70

pro familia
069 269 577 90

அவசர தேவையிலிருக்கும் கர்ப்பவதிகளுக்கான உதவித் செய்யப்படலாம்
0800 40 40 020

Stop-mutilation.de உதவித் தொலைபேசி
0211 938 857 91

## இங்கு சில நிலையங்கள் தரப்படுகின்றன, இவற்றை நீங்கள் தொடர்புகொள்ளலாம்:

பொலிசாரிடம் அவசர அழைப்பு
110

நடமாடும் ஆலோசனை மத்திய அமைப்பு e.V
0351 500 541 6

Weißer Ring முழு யேர்மனிக்குமான வன்முறையால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான தொலைபேசி
116 006

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கான உதவித் தொலைபேசி*
08000 116 016

பெண்கள் ஆலோசனை நிலையம் மற்றும் பெண்கள் அவசர உதவி அழைப்பு மத்திய அமைப்பு
030 322 99 500

தஞ்ச ஆதரவு அமைப்பு
069 242 314 20

தனியாக வந்த வயது குறைந்த அகதிகளுக்கான மத்திய துறைசார் அமைப்பு e.V.
030 820 974 30

ஒதுக்குதல்களுக்கு எதிரான அமைப்பு, யேர்மனி (advd)
0341 307 876 90

- எனக்கு பெண் விருத்தசேதன ம் செய்யப்படலாம் என்ற பயம் உள்ளது. நான் யாருடன் இது குறித்து கதைக்கலாம்?
- பாலியலால் தொற்றும் நோய்கள் குறித்து எனக்குப் பயமாக உள்ளது. எங்கு என்னைப் பரிசோதித்துக் கொள்ளலாம், எப்படி நான் என்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம்?
- நான் கர்ப்பமாவதை விரும்பவில்லை. எங்கு நான் கர்ப்ப முற்தடுப்பு முறைகள் குறிதது அறிந்து கொள்ளலாம்?
- புதிதாக பாலியல் உறவை செய்து பார்க்குமாறு நான் எனது துணைவரிடமிருந்து அழுத்தத்தில் உள்ளேன். நான் எவ்வாறு இதைத் தடுக்க முடியும்?
- நான் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளேன். இது குறித்துக் கதைப்பதற்கு எனக்கு கடினாக உள்ளது? நான் யாரை நம்பலாம்?



## எண்ணத்தில்-, மனச்சாட்சியில்- மற்றும் சமயத்தில் சுதந்திரம்

அனைத்து மனிதருக்கும் ஒரு சமயத்தை அல்லது ஒரு உலக நோக்கைக் கடைப்பிடிப்பதற்கும், அதிலிருந்து மாறுவதற்கும் அல்லது எந்தச் சமயத்திலும் சேராமல் இருப்பதற்கும் உரிமையுள்ளது. நீங்கள் தனியாகவோ அல்லது ஒன்றுசேர்ந்தோ உங்கள் நம்பிக்கையில் வாழ்வதற்கு உரிமையுள்ளது. சமயம்- மற்றும் உலக நோக்கிற்கான சுதந்திரம் என்பது கருத்துச் சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும்.

மனதில் எண்ணுவது சுதந்திரமானது

# பங்கேற்றல்

நீங்கள் தஞ்சமடைந்த ஒரு பெண்ணாக வாக்களிக்க உரிமையின்றி இருப்பினும், உங்கள் கருத்தும் கேட்கப்படலாம்.

- நீங்கள் பெண்களைச் சந்திக்கலாம், மற்றும் நீங்கள் ஒன்றுசேர்ந்த ஏதாவது ஒன்றை உருவாக்கலாம், உதாரணமாக ஒரு அமைப்பை ஏற்படுத்தலாம்.
- நீங்கள் மற்றவர்களுடன் சேர்ந்து பொது இடங்களில் ஒன்றுகூடலாம் மற்றும் உங்கள் உரிமைக்காக மற்றும் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கலாம்.
- நீங்கள் சமூக மற்றும் அரசியல் ரீதியாக முன்னின்று செயற்படலாம், உதாரணமாக குடிவரவாளர்களது இணையத்தளம் மற்றும் செயற்பாட்டாளர்களோடு சேர்ந்து இயங்கலாம்.







# கலாச்சார அடையாளப்படுத்தல்கள்

ஒரு தஞ்சமடைந்த பெண்ணாக உங்கள் கலாச்சார மற்றும் உங்கள் சொந்த மனப்பான்மையில் வாழ்வதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது. எந்த வடிவமான ஒதுக்குதல்களாக இருப்பினும் (பாலின, இனரீதியான, சமய, வயது, அங்கவீனம், பாலியல் அடையாளங்கள்) அவை தடைசெய்யப்பட்டுள்ளதுடன் அது தண்டனைக்குரியதாகும். இதன்போது பக்கசார்பின்றி உதவி செய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆலோசனை மற்றும் ஆதரவு வழங்கத் தயாராக உள்ளன, இதற்கு உதாரணமாக:

- தோல் நிறம் காரணமாக வீதியில் நீங்கள் இகழப்பட்டால் அல்லது தாக்குதலுக்கு உள்ளானால்
- நீங்கள் ஒரு முஸ்லிம் பெண்ணாக தலை முக்காடுடன் தொழிலுக்குச் செல்வதால் அல்லது நீங்கள் வீடு தேடும்போது சமயம் காரணமாக ஒதுக்கப்பட்டால்
- நீங்கள் ஒரு பெண்ணைக் காதலித்து, வெளிப்படையாகக் கட்டியணைத்தால், நீங்களோ அல்லது உங்கள் தோழியோ இதன் காரணமாக பயமுறுத்தப்பட்டால் அல்லது காயங்களுக்கு உள்ளானால்
- நீங்கள் பொதுப்பாலானாவர்களாக, மாறிய பாலுணர்வு உள்ளவர்களாக, ஓரினச் சேர்க்கையாளர்களாக அல்லது பாலின சேர்க்கையாளராக இருப்பதால், உங்களுக்கு உளரீதியான மற்றும் மருத்துவ உதவிகள் மறுக்கப்பட்டால்.

## குடிவரவாளர்களுக்கான அமைப்புகள் குறித்த ஒரு பட்டியலை நீங்கள் கீழே காணலாம்:

DaMigra e. V. (குடிவரவாளர்களுக்கான தாய் அமைப்பு*)
www.damigra.de

LesMigras e. V. – ஒதுக்குதலுக்கு எதிரான- மற்றும் வன்முறைக்கு எதிரான பெண்ணினச் சேர்க்கையாளருக்கான ஆலோசனை -பேர்லின் e. V. (ஆலோசனை: அராபிஸ், டொச், ஆங்கிலம், -குர்திஸ், பேர்சிஸ், பிரெஞ்சு, ஸ்பானிஸ், சேர்போ-கொராட்டிஸ், ரூசிஸ், பல மொழிகளிலான பக்கம்)
lesmigras.de

பெண்ணின- மற்றும் ஆணினச் சேர்க்கையாளர் அமைப்பு யேர்மனி e. V. (LSVD):
www.lsvd.de

MILES – குடிவரவாளர், பெண்ணின- மற்றும் ஆணினச் சேர்க்கையாளர் நடுநிலையம் LSVD Berlin- -Brandenburg:
berlin.lsvd.de

மனித உரிமைகளுக்கான நிலையம் (டொச்- -ஆங்கிலம்):
www.institut-fuer-menschenrechte.de

Terre des Femmes – பெண்களுக்கான மனித உரிமை நிலையம்
www.frauenrechte.de

படம் வரைபு: el boum

# MUT-திட்டம்.

## உரிமை, உங்கள் உரிமையை அறிந்துகொள்ளல்.

Dr. Soraya Moket
MUT-திட்ட அதிபர்

Małgorzata Gedlek
MUT-முழு ஒழுங்கமைப்பு

Nevruz Karadas
MUT-ஊடக மற்றும் வெளித்தொடர்பு

DaMigra e. V. | MUT-Projekt
Am Sudhaus 2
12053 Berlin
030 92 25 13 01

mut@damigra.de
www.damigra.de/mut-projekt
www.facebook.com/DaMigra

இத் திட்டத்தை வழங்குவது:

DaMigra

ஊக்குவிப்பு:

Die Beauftragte der Bundesregierung für Migration, Flüchtlinge und Integration